# தூய லூர்து அன்னை ஆலயம்

50இ ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690
தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம்
frmichaelsitaram@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பால் இயோ
fryeopaul@gmail.com

உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ்
nithiya@catholic.org.sg

பங்கு அலுவலகம் : ololpastoral@gmail.com
ololsec@gmail.com

17-12-2017 திருவருகைக் காலம் 3ஆம் ஞாயிறு (இரண்டாம் ஆண்டு)



## இரண்டாவது காணிக்கை

கத்தோலிக்க அடித்தள அமைப்பின் GIFT (விசுவாசத்துடனும் நன்றியறிதலுடம் கொடுத்தல்) திட்டத்திற்கான உங்களது மாதாந்திரப் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள இரண்டாம் காணிக்கை வசூலிக்கப்படும்.

## திருமண முன் தயாரிப்பு கருத்தரங்கு

நாள் : 17-12-2017, இன்று
நேரம் : காலை 10.30 மணி முதல்
இடம் : தூய லூர்து அன்னை பங்கு பல்நோக்கு கூடம்
கட்டணம் : $30.00

## ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணி



தேதி : இன்று, 17-12-2017
நேரம் : மதியம் 2.30மணி

**ஆலய துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் பிற்பகல் 2.30 மணி முதல் 4.00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.**



## முழு இரவு ஜெப வழிபாடு

மாதத்தின் ஒவ்வொரு இரண்டாவது சனிக்கிழமையும் இரவு 9.30 மணி முதல் காலை 5.30 மணி வரை முழு இரவு ஜெப வழிபாடு நடைபெறும். கலந்து கொண்டு தூய ஆவியின் கனிகளை, கொடைகளை பெற்றுக் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## இடைவிடா சகாய மாதா நவநாள் மற்றும் நற்கருணை ஆராதனை

ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 8.30 மணிக்கு நம் தூய லூர்து அன்னை ஆலயத்தில் நடைபெறும். நம்முடைய பங்கு மக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டு இறையாசீர் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு திருப்பலி நேரங்கள்

**ஞாயிறு திருப்பலி, 24 - 12 - 2017**

காலை 07:30 : ஆங்கிலத்தில் திருப்பலி
காலை 09:30 : தமிழில் திருப்பலி
காலை 11:30 : ஆங்கிலத்தில் திருப்பலி
மதியம் 01:00 : ஆங்கிலத்தில் திருப்பலி

**கிறிஸ்து பிறப்பு பெருவிழா இரவு திருப்பலி நேரங்கள்**

இரவு 09:00 : ஆங்கிலத்தில் திருப்பலி
இரவு 11:00 : தமிழில் கிறிஸ்துமஸ் பாடல்கள்
இரவு 11:30 : தமிழில் திருப்பலி

**திங்கள் திருப்பலி , 25 - 12 - 2017 (கிறிஸ்மஸ்)**

காலை 09:00 : ஆங்கிலத்தில் திருப்பலி
காலை 10:30 : தமிழில் திருப்பலி

**ஞாயிறு திருப்பலி , 31 - 12 - 2017**

காலை 07:30 : ஆங்கிலத்தில் திருப்பலி
காலை 09:30 : தமிழில் திருப்பலி
காலை 11:30 : ஆங்கிலத்தில் திருப்பலி
மதியம் 01:00 : ஆங்கிலத்தில் திருப்பலி

**புத்தாண்டு இரவு திருப்பலி நேரங்கள்**

இரவு 09:00 : ஆங்கிலத்தில் திருப்பலி
இரவு 11:00 : தமிழில் நன்றி வழிபாடு
இரவு 11:30 : தமிழில் புத்தாண்டு திருப்பலி

**திங்கள் புத்தாண்டு விழா, 01 - 01 - 2018**

காலை 09:00 : ஆங்கிலத்தில் திருப்பலி
காலை 10:30 : தமிழில் திருப்பலி







அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# சிந்தனை

யோவான் நற்செய்தியின் தொடக்கத்திலேயே, அதனுடைய நற்செய்தியின் அடிப்படை சாராம்சம் வெளிப்படுத்தப்படுகிறது. யோவான் நற்செய்தியின் அடித்தளமாகப்பார்த்தால் இரண்டு செய்திகளைச்சொல்லலாம். 1. இயேசு தான் கடவுளின் வெளிப்பாடு 2. யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள மறுத்தல். வேறு எந்த நற்செய்தியிலும் காண முடியாத அளவுக்கு, யோவான் நற்செய்தியில் யூதர்கள் என்ற வார்த்தை ஏறக்குறைய 70 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களை இயேசுவுக்கு எதிர்ப்பானவர்களாக காட்டிக்கொள்கிறார்கள். கடவுளின் அன்பும், அவரது எச்சரிக்கையும் சமஅளவில் இங்கே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

திருமுழுக்கு யோவானைச் சந்திக்க குருக்களும், லேவியர்களும் வருகிறார்கள். பரிசேயர்களால் அவர்கள் அனுப்பப்பட்டவர்கள். எதற்காக குருக்களையும், லேவியர்களையும் பரிசேயர்கள் அனுப்ப வேண்டும்? இந்த கேள்விக்கான பதிலை நாம் பார்ப்போம். திருமுழுக்கு யோவானுடைய தந்தை செக்கரியா ஒரு குரு. யூத மதத்தில், குருத்துவம் என்பது வழித்தோன்றல் அடிப்படையானது. ஆரோனின் வழித்தோன்றலில் வராத யாரும் குருவாகப் பணிபுரிய முடியாது. அதிகாரவர்க்கத்தினரின் பார்வையில், யோவான் ஒரு குரு. எனவே, அவருடைய குருகுலத்தில் இருந்து, அவரைப்பார்த்து பேச அனுமதிக்கிறார்கள். அதேபோல, அவர்களை அனுப்பியது பரிசேயர்கள். அவர்களுக்கு பின்னால் தலைமைச்சங்கம் இருந்தது. யாராவது இறைவாக்கினர் தோன்றினால், அவர் உண்மையான இறைவாக்கினரா? அல்லது போலியான இறைவாக்கினரா? என்பதை அறிந்து, செயலாற்ற வேண்டியது தலைமைச்சங்கத்தின் கடமை. எனவே, பரிசேயர்கள் அவர்களை அனுப்பினார்கள். வழக்கமான குருவைப்போல இல்லாததாலும், வழக்கமான போதகரைப்போல இல்லாததாலும், திருமுழுக்கு யோவான் மேல், அதிகாரவர்க்கம் சந்தேகம் கொண்டது. புதுமைக்கு எதிரானவர்களாக இவர்கள் இருந்தது இதற்கு காரணம்.

தங்களது சுயஇலாபத்திற்காக, ஆதாயத்திற்காக வளர்ச்சியை ஏற்றுக்கொள்ளாதவர்களும், சுயநலத்திற்காக தேவையற்றவைகளை வளர்ச்சி என்ற பெயரில் புகுத்துவதும் இன்றைய அதிகாரவர்க்கத்தினரின் அடாவடி நடவடிக்கைகளாக இருக்கின்றன. நீடித்த, நிலைத்த வளர்ச்சியை நமது அரசுகள் தாரக மந்திரங்களாகக் கொண்டு இயங்கட்டும்.

**விவிலியக் குறுக்கெழுத்து**

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு தடவை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | ரு | மு | ன் | வு | ழி | பொ | ள் | ரு | அ |
| யு | ள | ஆ | டை | க | ளை | அ | ங் | லு | டி |
| ளை | ல் | ள் | ரு | இ | று | மா | கு | ட் | மை |
| க | ம் | ம் | உ | சா | டா | அ | வ | ண் | யி |
| மை | ர் | நே | ந | ப | ரை | து | தை | வி | ன் |
| தீ | தை | க் | கோ | வா | அ | தி | ண் | ழி | க |
| அ | டு | கை | டி | தை | ப் | ப | வ | கு | ங் |
| அ | மு | ய | க | டை | ந் | த | வ | ய | ஒ |
| நா | தி | கு | ற் | வா | ன | வி | ர் | வ | ளி |
| மி | ரு | ம் | கு | க் | கை | பே | வ | ழி | யை |

1. ஏனெனில், அவர் எனக்கு __________ செய்துள்ளார்.
2. __________ என்னும் ஆடையை எனக்கு அணிவித்தார்.
3. என் கடவுளில் என் __________ பூரிப்படையும்.
4. தம் __________ தாழ்நிலையைக் கண்ணோக்கினார்.
5. எல்லா வகையான __________ விட்டு விலகுங்கள்.
6. __________க் குறித்துச் சான்று பகர வந்தவர்.
7. ஆண்டவருக்காக __________ச் செம்மையாக்குங்கள்.
8. அவருடைய __________ அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை.

## ஞாயிறு வாசகங்கள்



முதல் வாசகம்: எசாயா 61:1-2a,10-11

பதிலுரைப்பாடல்: லூக் 1:47-48.49-50.53-54

பதிலுரை: என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும்.

இரண்டாம் வாசகம்: 1 தெசலோனிக்கர் 5:16-24

வாழ்த்தொலி: அல்லேலூயா, அல்லேலூயா! ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது; ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்க என்னை அனுப்பியுள்ளார். அல்லேலூயா!

நற்செய்தி வாசகம்: யோவான் 1:6-8,19-28

## ஆலயத் திருப்பலி நேரங்கள்

| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) | : மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) | : மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) | : மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) | : காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) | : காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை(ஆங்கிலம்) | : காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) | : காலை 10:00 மணி |



## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை | : மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை | : மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : வெள்ளி மாலை 6:30 மணி தொடர்ந்து திருப்பலி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை | : வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் | : ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை | : ஞாயிறு மாலை 6:00 மணி |
| | இறைவாழ்வு செபக்குழு வழிபாடு | : ஞாயிறு இரவு 9:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் | : முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் | : முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை | : முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் | : செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் | : வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் மற்றும் நற்கருணை ஆராதனை | : சனி மாலை 8:30 மணி |
| | முழு இரவு ஜெப வழிபாடு | : மாதத்தின் இரண்டாவது சனி இரவு 9.30மணி |
| | புனித பியோ செப வழிபாடு | : மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நிதிதிரட்டும் பணியை மறைமாவட்டமானது, தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. எனவே மறு அறிவிப்பு கொடுக்கப்படும் வரை இவ்வசூல் நிறுத்தி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு** மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் வீட்டிலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். **ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.**